**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 215/2018 P.W. 9/L.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | டாக்டர். ரிஜோ ரஜுலின் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. ரஜுலின் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 25.11.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் தற்போது சென்னை ரேளா மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் குளச்சல் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது 11.11.2016 ம் தேதி மாலை 06.10 மணியளவில் கோவிலான்விளை, அழகன்பாறை அஞ்சல் திரு. ராஜைய்யா மகன் 56 வயதுடைய ராஜரெத்தின மணி என்பவரது மனைவி மருத்துவமனைக்கு சிகிட்சைக்காக அழைத்து வந்தார். அவர் தன்னை தெரிந்த நபர் ஒருவர் மாலை 05.00 மணி அளவில் அவரது வீட்டில் வைத்து கையால் தாக்கியதாக என்னிடம் கூறினார். அவரை பரிசோதித்து பார்த்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார்.

அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன

காயம் 1. வலது பெருவிரலில் சிராய்ப்பு காயம் 3 x 0.5 cm அளவில் காணப்பட்டது.

காயம் 2. இடது பெருவிரல் அருகே சிராய்ப்பு காயம் 1.5x 1 cm அளவில் காணப்பட்டது.

காயம் 3. இடது கண் அருகே வீக்க காயம் 3x 2 cm அளவில் காணப்பட்டது.

நான் அவரை ஆண்கள் பிரிவில் உள்நோயாளியாக அனுமதித்தேன். அவர் சிகிட்சை முடிந்து 14.11.2016 ம் தேதி மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். 17.11.2016 ம் தேதி அவருக்கு ஏற்பட்ட காயங்களானது சிறுகாயங்கள் என்றுகருத்துரை கூறி சான்றுஅளித்தேன். **நான் அளித்த கருத்துரையுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

மேற்படி 3 காயங்களை தவிர்த்து வேறு காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.மேற்படி 3 காயங்ளும் ஒரு நபர் கால்தடுக்கி கீழே விழும் போது ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.